27 வீடுகள் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. முன்னால் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட ஏற்பாடு என்று சொன்னார்கள், ஒத்துக் கொள்கிறேன். இந்த 27 வீடுகள் எப்போது கட்டி முடிக்கப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களின் கேள்வியை கூர்ந்து கேட்டேன். அனுதாபத்தோடு கவனிக்கும் இந்த அரசு.

திரு. சி. மாணிக்கம் : இது எந்த ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது ? அப்போது ஆண்டவர்கள் யார் ? காலதாமதத்திற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1971 ஆம் ஆண்டு நில ஆர்ஜித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டைச் சொல்லிவிட்டேன். அப்போது ஆண்டவர்கள் யார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊகித்துக் கொள்ளலாம். தாமதத்திற்கான காரணம், நில ஆர்ஜித நடவடிக்கைகள் குறித்த கால தாமதத்திற்கு காரணம், முதல் சொந்தக்காரர்கள் நிலத்தை இன்னொருவரிடம் விற்று விட்டார். இரண்டாவது சொந்தக்காரர் நிலத்தை இன்னொருவரிடம் விற்றுவிட்டார். அவர் தம்பி கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இன்னும் பல காரணங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மன்னார்குடி தாலுக்காவில் செருகுளத்தூர், கர்ணாவூர் போன்றயிடங்களில் ஆர்ஜிதம் செய்யப்பட்டு மனைகள் வழங்கப்படாமல் இருக்கிறது. காலதாமதமாகிறது. அது விரைவில் கவனிக்கப்படுமா ?

(பதில் இல்லை.)

அரிசன மாணவர்களுக்கு சிறப்பு உதவித் தொகை.

* .வினா எண். 449— திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ் நாட்டில் கல்வி பயிலும் அரிசன மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பில் 60 சதவீதத்துக்கு மேல் மதிப்பெண்கள் பெற்றால் சிறப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறதா?

1979 மார்ச் 17]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது 11 ஆம் வகுப்பில் பள்ளி இறுதித் தேர்வில் அதாவது 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 60 விழுக்காடும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்ற பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் அதிலிருந்து மதம் மாறிய வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தகுதி மானியமாக ரூ. 300 வழங்கப்பபட்டு வருகிறது. புதுக் கல்வி திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளதால் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த 10 ஆம் வகுப்புத் தேர்வில் 60 விழுக்காடும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு மேற்கண்ட திட்டத்தை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 10—20]

திரு. நா. பழனிவேல் : தமிழகத்தில் கல்வி பயிலுகின்ற ஆதிவாசி மாணவர்களுக்கு ஏற்கெனவே இருந்து வந்தது போல், எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகளில் 60 மதிப்பெண்கள் பெற்றிருந்தால் சிறப்பு உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது. இப்போது 11 ஆம் வகுப்பு மேல்படிப்புக்குச் சென்று விட்டது. ஆகையால் இப்போது பத்தாம் வகுப்பிலும் 60 மதிப்பெண்கள் பெறக்கூடிய மாணவர்களுக்கு சிறப்பு உதவித் தொகை வழங்குவதற்கு இந்த ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படி வழங்கப்படும் உதவித் தொகையானது எந்த ஆண்டோடு முடிவு பெறும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கல்வித் திட்டத்தில் மாறுதல் ஏற்பட்டதின் காரணமாக கல்வித்துறை இயக்குநர் அவர்களிடத்தில் இதுபற்றி அறிக்கை கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு 10-வது வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கும் இந்தத் தொகை தொடர்ந்து வழங்கப்படும். எந்த ஆண்டு வரை கொடுக்கப் படும் என்று கேட்டார்கள். இந்த கல்வித் திட்டம் தொடரும் வரை இந்த உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படும்.

திரு. இ. தமிழரசன் : 10 ஆம் வகுப்பில் 60 மதிப்பெண்கள் பெறக்கூடிய மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறதா? அப்படியென்றால் கடந்த ஆண்டு மொத்தம் எத்தனை மதம் மாறிய கிறிஸ்துவ மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. எத்தனை பேர்கள் என்கின்ற விவரம் இங்கே இல்லை. தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

[1979 மார்ச் 17

திரு. நா, பழனிவேல் : துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட ஆதிவாசி மாணவர்கள் இவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மாணவர்கள் பத்தாவது வரை படிப்பதே மிக பெரியதொரு பிரச்னை. மேலும் 60-க்கு மேற்பட்ட மதிப்பெண்கள் வாங்குவது அதிலும் ஒரு பிரச்னை, ஆகவே, இந்தப் பகுதி மக்களை கல்வியிலும் மற்ற பதவிகளிலும் முன்னுக்கு கொண்டுவரவேண்டும் என்று முயற்சி எடுக்கக்கூடிய வகையில், இந்த மாணவர்களுக்கு பட்டப்படிப்பு முடியும் வரை இந்த உதவித் தொகையை வழங்குவதற்கு இந்த ஆண்டிலிருந்தே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? நடவடிக்கை எடுக்கவில்லை யென்றால் இந்த ஆண்டிலிருந்தே உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1976 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்தத் திட்டம் ஆரம்ப காலத்தில் 70 மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு மட்டும்தான் இந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசாங்கம் பதவி யேற்ற பின்னால், 70 மார்க்கு என்றிருந்ததை 60 மார்க்காக குறைத்திருக்கிறது. தற்போதுள்ள நிலைமையில் 10-ம் வகுப்பு வரையிலும் அல்லது எஸ். எஸ். எல். சி. வரையிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற உதவித் தொகை எல்லா கல்விகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண் 450..

திரு. சு. பாலன் : இந்த இலாகாதான் பின்தள்ளப்பட் டிருக்கிறது என்றால், கேள்வி கேட்பதையும் ஏன் பின் தள்ளுகிறீர்கள்?

(திரு. சு. பாலன், திரு. தி. சு. நல்லதம்பி இவர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள், அடுத்த கேள்வியில் கேளுங்கள். தயவு செய்து உட்காருங்கள்.

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்குக் கூடுகள் கட்டுதல்.

*வினா எண் 450—திரு. மு. அண்ணாமலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :—